உ

ஸ்ரீ ராமஜெயம்.

திருமாலிருஞ் சோலைமலை

அழகர் வர்ணிப்பு.

இஃது

முன்னோர்களால் இயற்றியதை:

மதுரைப் புஸ்தகஷாப்

ஆ. மா. வ. கருப்பணக் கோனாரவர்கள்.

கேட்டேக்கோண்டபடி

மதுரைப் புதுமண்டபம் புஸ்தகஷாப்

அ. பெ. சுப்பையாபிள்ளையால்

டைட்டில்பேஜ் மட்டும்

மதுரை வடக்குமாசிவீதி,

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

172836

1917.

இதன்விலை] [அணா 2.

OFFICE OF THE REGISTRAR ... 11 OCT 1917

172836

ஸ்ரீ

அழகர் வர்ணிப்பு.

விநாயகர்-காப்பு.

வெண்பா.

ஓங்கார மாகியத னுட்பொருளாய் நின்றமத
மாஙகா ரசல மருள்தருமே—யேங்காதே
மாவழக னற்சிறப்பை மாரா தெடுத்துரைநீ
பாவமில்லை என்னு மறை பார்.

இவ்வெண்பா மனதிற்கு அறிவு துணிவுகொள்ள
எடுத்தறிவித்ததும்போல் முடியும்.

கணபதியே விக்னேசா கைதொழுதே னடியேன்
முப்பொருளாய் விளங்கும் மூலச்சோதிச்சுடரே
யானைமுகமும் அழகிய மத்தகமும்
ஓரிருகாதும் உற்றதொந்தி துதிக்கையும்
ஐந்துவிதகரமும் அமர்ந்த பாசாங்குசமும்
நான்குவாயும் கவம்பெறு மழுவும்
முன்னூலின் மார்பு முயராகுவாகனமும்
பேழைவயிறும் பெரும்பாரக் கோடும்
செந்தாமரைப் பாதமும் சிறந்திடும் செந்தூரப்பொட்டும்
வல்லபையைத்தன்னிடம் பாகாக வைத்தவனே
அங்கயற்கண்ணாளீன்ற அப்பனே விநாயகனே
சேடுவினையார் மனதில்கிருபையுடன் வீற்றிருக்கும்
வெள்ளைவிநாயகனே வேண்டினே னுன்னடியை
என்குறையெல்லாம்போக்கி ஏழையங்கில்தானிருந்து

நல்லவரங்கொடுத்த நலம்புரிய வேணுமையா
வள்ளிதனைச் சிறையெடுத்த வடிவேலா எந்தனுட
வள்ளலேஞானமுருகா வேதாந்தப் பேரொளியே
பரங்கிரியில்வாழுகின்ற பரமசிவன் புத்திரனே
வரந்தந்தென்னாளும் வாக்கினில் மேவுமையா
ஆலமுண்டகண்டனுட ஆத்தாள் சரஸ்பதியே
மாலவனின்மருமகளே மலரோன்றனாயகியே
காவிமலர்பூத்த கண்மணியே சுந்தரியே
காவிலிருந்துயென்னை நாடோறுங் காருமம்மா
சிவனைத்தொழுதேன் சிவன்பாதந் தஞ்சமென்றேன்
சிவனிருந்த வாகனத்தை அய்யா சுமந்தேன் றலைமீதில்
அரியுஞ்சிவனுமையா அறுதினமும் நான்மறவேன்
அரியுடையவக்ஷரத்தை சுய்யா அன்பாய் மனதிலெண்ணி
எம்பெருமானைநோக்கி கடுகவே எடுத்தேன் சிலமுகத்தை
எம்பெருமானே நீதான் எனக்குதவியாயிருப்பாய்

(கிருஷ்ணன் ஜெனனம்)

பிறந்தாய்வடமதுரை என்னய்யன் போய்வளர்ந்தாய் ஆய்பாடி
அறந்தான் மிகப்பெருக காயாம்புமேனி அசோதை முலைப்பாலுண்டு
நந்தகோபன் றன்னிடத்தில் ஆதிமூலம் நல்லமகன்போலிருந்து
வந்தவினைகளெல்லாம் சுந்தராஜமூர்த்தி அந்தரத்திற்போகவிட்டு
நஞ்சுமுலைப்பாற்குடித்து கோவிந்தமூர்த்தி வஞ்சியரைத்தஞ்சமென்று
கஞ்சன்றனை மடித்து கோவிந்தமூர்த்தி தஞ்சமென்றோரைக்காத்து
வடமதுரைவிட்டு பச்சைமாலச்சுதன் வந்தாரழகமலை
வடவாவின்மேலேதான் என்னய்யன் திடமாகப்பள்ளிகொண்டார்
பள்ளிகொண்டபின்பு நீலமேகம் பசுமேய்க்கவேணுமென்று
அள்ளியேகோறெடுத்து காயம்புமேனி துள்ளிதமாய்த்தானேறி
வண்ணலக்ஷம்பால்பசுவை ஆதிமூலம் நண்ணயமாயுண்டுபண்ணி
அண்ணல்பலபத்திரனை ஆதிமூலம் முன்னேயே போகவிட்டு
வேகமுள்ளபசுவுக்கு கோவிந்தமூர்த்தி வீரமணிதான்பூட்டி
போகவிட்டாராவினங்களை ஆதிமூலம் பூமிமிகத்தத்தளிக்க
மலையிற்பசுமேய நரசிங்கமூர்த்தி வடவாயில்பள்ளிகொண்டார்
மலைமேல்பசுக்களெல்லாம் அப்போது மைதானத்திற்றுன்மேய
பள்ளிகொண்டுதானெழுந்து சுந்தராஜமூர்த்தி பார்த்தார்பசுக்களையும்
தள்ளிப்போய்மேய்ந்ததினால் என்னையன் கண்ணுக்குத்தோணவில்லை
ஆத்திமரத்தடியில் நீலமேகம் சாத்திவைத்தார் சிங்குழலை
பார்த்துமிகவெடுத்து கோவிந்தமூர்த்தி பண்பாகவாயில்வைத்து
ஊதினார்சிங்குழலை பச்சைமாலச்சுதன் உலகேழுந்தான்கேட்க
ஆதிசேடன்நடுக்க என்னய்யன் ஓசையினால் ஜாதியெல்லாமொன்றாக

172836

1771
294.8111

அழகர் வர்ணிப்பு

அப்போது பசுக்களெல்லாம் என்னய்யனிடத்தி லோடிவர
செப்பமுடன் பசுக்களை காயாம்புமேனி சேர்த்துச்சரிபார்த்தார்
மாடுசரிபார்த்தார் கோவிந்தமூர்த்தி மணிப்பசுவைக் காணோமென்றார்
ஓடும்பசுவில் சுந்தராஜமூர்த்தி ஒருபசுவைக் காணோமென்றார்
காலிசரிபார்த்தார் கோவிந்தமூர்த்தி கமலப்பசுவைக் காணோமென்றார்
பால்போல் நிறமுடைய ஆதிமூலம் பாற்பசுவைக் காணோமென்றார்
ஒப்பமுடன் சித்தர்களை நரசிங்கமூர்த்தி அப்போது வரவழைத்தார்
பதினெண்சித்தர்களும் என்னய்யன் முன் எதிரிட்டோடிவந்து
வாசுகியை சித்தரெல்லாம் காயம்புமேனியை வணங்கித்துதித்தார்கள்
சாறறிஞர்கள் புட்பமலர் பச்சைமாலச்சுதனை பார்த்தபேர்கொண்டாட
போற்றினசித்தர்களை ஆதிமூலம் பார்த்துமிக ஓதலுற்றார்
தப்பிப்போனபசுவெல்லாம் நீலமேகம் இப்போதொருநொடியில்
செப்பமுடன் கொண்டுவா காயாம்புமேனி அப்பனுரைத்திடவே
ஓடினார் சித்தரெல்லாம் நீலமேகம் பசுவைத்தேடினார் காடெல்லாம்
காடெங்குங்காணாமல் ஆதிமூலம் சித்தர் வாடிமிகநிற்கையிலே
குன்றைக்குடைபிடித்த காயாம்புமேனி கோவிந்தன் தன்னருளால்
வண்ணப்பசுக்களெல்லாம் அப்போதுநீலமேகம் கன்றுகளைத்தான்தேடி
வெள்ளிமலைக்கோம்பைதனை பசுக்களெல்லாம் விட்டுவெளியேறி
தள்ளிவருகையிலே சித்தரெல்லாம் கண்டார்பசுக்களையும்
பசுக்களையோட்டிவந்து சித்தரெல்வாம் பட்டியிற்றான்சேர்த்து
சிசுபாலனைக்கொன்றவனை காயாம்புமேனியை விசுவாசமாய்ப்பணிந்தார்
வந்துபணிந்தவரை நீலமேகம் விந்தையாய்ப்போகவிட்டு
அந்நேரந்தனிலே கோவிந்தமூர்த்தி சந்தோஷமாய்த்தானெழுந்து
பால்கறக்கவேணுமென்று நீலமேகம் கோலக்கயிறெடுத்து
வாலிதனைக்கொன்ற பச்சைமாலச்சுதன் வடிவெடுத்தார்காயாம்பு
ஆடிக்கறந்தாராம் நரசிங்கமூர்த்தி ஐந்துலட்சம் பால்பசுவை
பாடிக்கறந்தாராம் என்னய்யன் பத்துலட்சம் பால்பசுவை
பாலைக்கறந்தாராம் கோவிந்தமூர்ததி மாலைப்பொழுதினிலே
ஆலமுண்டகண்டனுக்கு நீலமேகம் அனுப்பினார்பாலையெல்லாம்
பாலையனுப்பியபின் காயாம்புமேனி பசுவைமிகவோட்டி
கோலத்தொழுவுதனில் ஆதிமூலம் கொண்டுவந்துமேயடைந்தார்
பொதுவரையுமங்கேதான் சுந்தரராஜமூர்த்தி சுவருடனேதானிருத்தி
மதிவண்ணனையங்கேதான் நரசிங்கமூர்த்தி வைத்தார்வரதனிட
அலைகடலிற்றுயின்றதுபோல் என்னய்யனுக்கு அரவங்குடைபிடிக்க
மலையைவடக்கேவைத்து கோவிந்தமூர்த்தி வந்துமிகப்பள்ளிகொண்டார்
புவனத்திலுள்ளோர்கள் மலையிற்போய் புனல்தீர்த்தமாடுதற்கு
தாகமெடுத்தோர்க்கு என்னய்யன் தானேயருந்தும்படி
கலைகொடுத்துமுன்னால் ஆயர்பாடியில் கன்னியரைக்காத்ததுபோல்
மலைமேலேதீர்த்தமதை நீலமேகஸ்வாமி வாகாய்வரவழைத்தார்

அழகர் வர்ணிப்பு

பதினெண்சித்தரையும் காயாம்புமேனி படியாய் மிகச்சமைத்தார்
ஆதிகெருடனையும் பச்சைமாலச்சுதன் ஆதினார்வாகனமாய்
சேத்திரபாலனையும் ஆதிமூலம் கெர்திருவாள்தனையும்
சாற்றிபெருமுன்னே நிற்க நரசிங்கமூர்த்தி தலைவாசல்காவலுமாய்
பண்ணைமணியத்துக்கு காயாம்புமேனி பதினெட்டாம்படிக்கருப்பை
சொன்னபடிகேட்க ஆதிமூலம் முன்னாகத்தானிருத்தி
ஊருக்கினரும் கோவிந்தமூர்த்திக்கு உறங்காப்புளியும்
படுக்கவிருக்க சுந்தராஜமூர்த்திக்கு பளிங்குகால் மண்டபமும்
புத்தரைமாற்று தங்கத்தால் காயாம்புமேனிக்கு சுற்றித்திருமதிலாம்
மத்தசெஜமேடையும் சுந்தராஜமூர்த்திக்கு சுற்றிமிகசிறுத்தி
எழுமலைக்கோபுரமும் ஆதிமூலத்துக்குஇரங்காதமேடையுமாம்
கருவேலந்தன்னில் என்னய்யனுக்கு மாருத்திரவியமாம்
புந்திபந்திமண்டபமாம் நீலமேகஸ்வாமிககு வந்தபேர் தானிறங்க
அந்திசந்திநேரமதில் காயாம்புமேனியை அந்தரத்தோர் வந்துதொழ
இந்தப்படியாக பச்சைமாலச்சுதன் சந்தித்துமேயிருக்க
அந்தமுடனிமையோர் என்னய்யனை வந்துபணிந்தேதுசொல்வார்
பதுரை வடமுகமாய் காயாம்புமேனி வைகைநதி வண்டியூர் மேற்புறமாய்
சதுருடனே எல்லோர்க்கும் நீலமேகம் தானேபசிதணிக்க
அரவின்மேல்நின்று சுந்தராஜமூர்த்தி ஆடினவிதம்போலே
வரவேணுமென்றுசொல்லி என்னய்யனை வானோரழைத்திடவே
சரணஞ்சரணமென்று நீலமேகத்துக்கு சாற்றுவார் புட்பமலர்
வாகனத்தின்மீதேறி நீலமேகம் வாகாகப்போவதற்கு
எப்போபோவோமென்று ஆதிமூலம் அப்பனுரைத்திடவே
அப்போது தேவரெல்லாம் வைகைநதிபோக செப்பமுடன் நாட்பார்த்து
சித்திரைமாதத்தில் காயாம்புமேனி சித்திரைநட்சத்திரமாம்
சித்திராபருவத்தில் நரசிங்கமூர்த்தி விஸ்தாரமாகவேதான்
போகவேணுமென்றுசொல்லி ஆதிமூலத்தை போற்றினார் தேவரெல்லாம்
மனுதேமாமுனிக்கு சுந்தராஜமூர்த்திவாகாக மோக்ஷமுங்கொடுக்க
வாகாக மாயவனாரப்போது போவோமென்று தானுரைத்தரர்
குன்றைக்குடைபிடித்த என்னய்யன் கோவையைக்காத்ததுபோல்
பாஞ்சாலராஜன்பெற்ற கன்னிபெண்ணாள் துரோபதையை
வஞ்சகமாய் நூற்றுவரில் துர்ச்சாதனன் வாகாய் மயிர்பிடித்து
வாகாய்த்துயிலுரிய ஆதிமூலம் மாருத்துகில் தந்ததுபோல்
ஐந்துபஞ்சபேர்தனக்கு நரசிங்கமூர்த்தி ஆதரவாய்த்தானிருந்து
பதினெட்டுநாள்போரும் சுந்தராஜமூர்த்தி பண்பாகவென்றுகொண்டு
தருமருக்குப்பட்டங்கட்டி நீலமேகம் தன்மையாய்வைத்ததுபோல்
வண்டியூர்பள்ளிகொள்ள காயாம்புமேனி வருகிறார் தென்முகமாய்
சுவாமிபோவதற்கு ஆதிமூலம் சாமான்முதல்வேணுமென்று
எவராலேயாகுமென்று காயாம்புமேனி எண்ணியேதான்பார்த்து

விஸ்வகர்மாவை நரசிங்கமூர்த்தி எதிராய்வரவழைத்து
வாசத்திரைமுதல் என்னையன் வாகாய்கெருடனையும்
சப்பரத்தையுண்டுபண்ணி நீலமேகம் நல்லாகுளத்தில்வைக்க
செப்பமுடன்பல்லக்கைகோவிந்தமூர்த்தி எப்போதுமென்னிடத்தில்
தண்டிகையுண்டுபண்ணி ஆதிமூலம் கொண்டுவாவென்றுசொல்லி
வண்டியில்லாச்சப்பரத்தை காயாம்புமேனி வாகாய்சமையுமென்றார்
அந்நேரந்தனிலே பச்சைமாலச்சுதன் ஐந்துதலைநாகத்தையும்
வந்தபேர்கொண்டாட என்னையன் விந்தையாய்ச்செய்யுமென்றார்
நல்லதென்றுசொல்லி நடந்தார்விஸ்வகர்மா
எள்ளளவுநேரெடுத்து விஸ்வகர்மா துள்ளிதமாய்த்தான்தெளித்து
அய்யனுரைத்தபடி விஸ்வநளன் மெய்யாகவுண்டுபண்ணி
வையகத்தோர் கொண்டாட விஸ்வநளன் வைத்தானொருநொடியில்
பாரதபோர்தன்னிலே காயம்புமேனி பதினலாம்நாட்போரில்
சூரியனைச்சக்கரத்தால் ஆதிமூலம் சுருக்காய் மறைத்ததுபோல்
உண்டுபண்ணிவந்தேனென்று என்னையனுக்கு உரைத்தான்நளனுமப்போ
பண்டுவகையுண்டுமிழ்ந்தோன் நீலமேகம் பச்சைமாலப்போது
வந்தநளனுக்கு சுந்தராஜமூர்த்தி வரமுமிகக்கொடுத்து
சந்தோஷமாயனுப்பி நீலமேகம் சவாரிபோவதற்கு
குமரப்பல்லக்கை ஆதிமூலம்கொண்டுவா என்றுசொன்னார்
அவர்களுமப்போது காயாம்புமேனி அய்யனுரைத்தபடி
கொண்டுவந்துவைத்து நரசிங்கமூர்த்தியை கும்பிட்டாரெல்லோரும்
பண்டுவகையுண்டு மிழ்ந்தோன் சுந்தரராஜன் கண்டுமனமகிழ்ந்து
பல்லக்குத்தானெடுக்க என்னப்பன் பலபேர்தனையழைத்து
செல்லப்பல்லக்கை நீலமேகம் சிறப்பாயெடுக்கச்சொல்லி
பல்லக்குமேலேறி கோவிந்தமூர்த்தி பள்ளிகொண்டோனிருந்து
வல்லத்தைமுன்னேவிட்டார் ஆதிமூலம்கல்லைப்பெண்ணாக்கிவைத்தோர்
தேவர்களைமுன்னேவிட்டார் சுந்தராஜன் மாவலியைத்தான்ஜெயித்தோர்
கோவலர்கள் தன்னையெல்லாம் என்னையன்ஏவினார் முன்னாக
குடைகள் சுருட்டியெல்லாம் என்னையன் படையுடனே போகவிட்டு
ஆடைபுனைந்திருக்கும் காயாம்புமேனிஅரம்பையரையாடவிட்டார்
கருப்பண்ணசுவாமியை நீலமேகம் அனுப்பினார்முன்னேதான்
அருணனுதயத்திலே சுந்தராஜமூர்த்தி அய்யனெழுந்திருந்து
தெற்குமுகமாக ஆதிமூலம் திருமால்பர்வாராராம்
அரக்கர்படைகள் நீலமேகம் குதிக்குதுபல்லாக்கு
கோட்டைகடந்தவுடன் நீலமேகம் குதிக்குது பல்லாக்கு
வேட்டைக்குப்போவதுபோல் ஆதிமூலம் தாட்டிகமாய்த்தானடந்து
வள்ளல்வரும்வழியில் -அங்கே பிள்ளையார்தானிருந்தார்
பிள்ளையார்தன்னிடத்தில் கோவிந்தமூர்த்தி போய்வாரேனென்றுசொல்லி
சீர்கொளம்மாமண்டபத்தில் ஆதிமூலம் சென்றுஇளைப்பாரி

அழகர் வர்ணிப்பு

விரைவாய்நடந்தாராம் கோவிந்தமூர்த்தி பல்லக்குமேலேதான்
பட்டர்தொடர்ந்துவர நரசிங்கமூர்த்திகட்டழகன்தானுமப்போ
வட்டக்குடைபிடிக்க சுந்தருஜமூர்த்தி வாராருல்லாசமதாய்
வையகத்தோர்கொண்டாடும் நரசிங்கமூர்த்தி மாயனருள்ணிறைந்த
பொய்யக்கரைவிட்டு ஆதிமூலம் புறப்பட்டார் எம்பெருமான்
கள்ளந்தரிமண்டபம் கண்பார்த்தார் காயாம்பு
வல்லயக்கோளில்வைத்து என்னய்யனை கள்ளர்வழிமறித்தார்
கள்ளர்வழிமறித்து காயாம்புமேனி கலகமிகச்செய்தார்கள்
வல்லளாரப்போது நீலமேகம் கள்ளர்களைத்தான்ஜெயிக்க
மாயக்கருணையெடுத்து ஆதிமூலம் வரிவில்விற்றூன்பூட்டி
ஆயர்தொடுத்துவிட நரசிங்கமூர்த்தி அப்போதுகள்ளரெல்லாம்
கண்ணுந்தெரியாமலப்போது கள்ளர் மயங்கியேநின்றார்கள்
புண்ணாகநொந்துகள்ளர் காயாம்புமேனியை புலம்பித்துதித்தார்கள்
வழிவழிவம்சமாய் நீலமேகம் வந்தார்களடிமையென்றார்
ஒளிவுதெரியும்படி ஆதிமூலம்உம்மாலவிந்தகண்ணை
திரக்கவேணுமென்றுசொல்லி கள்ளர் மார்க்கமுடனேபணிந்தார்
இறையவனுமப்போது இறக்கமுடனேதுசொல்வார்
எப்போதுங்கள்ளர்களே நீங்கள் செப்பமுடன்தானிருந்தார்
கொப்பரையைக்காத்து நீங்கள் கொடுங்களென்றுதானுரைத்தார்
வண்டியூர்போய்நான் மலைவந்துசேருமட்டும்
அண்டியேவாருங்களென்று கண்டிதமாய்த்தானுரைத்தார்
எறினார்பல்லக்கை நீலமேகம் எழுப்பிவிட்டாரப்போது
கோவிந்தன்பல்லக்கு அப்போது மாயமாய்த்தான்வரவே
அப்பன்திருப்பதியே ஆதிமூலம் அடுத்ததுபல்லாக்கு
அப்பன்திருப்பதியில் சுந்தராஜமூர்த்தி ஆயாசந்தீர்ந்துமேதான்
மதுரைவழிநோக்கி நீலமேகம்பல்லாக்கு சதுராய் வருகுதங்கே
வல்லமுகுந்தபிரான் பூண்டிமண்டபந்தன்னிலே வக்தையையுங்கடந்து
அதிரவழிநடந்து மரவமண்டபம் அடுத்ததுபல்லாக்கு
மரவமண்டபத்தில் நரசிங்கமூர்த்தி வந்துமிகப்பள்ளிகொண்டார்
அரவணையிற்றுயின்றோர் நீலமேகம் திரௌபதியைக்காத்தோர்
பஞ்சவரைக்காத்தாண்டோர் ஆதிமூலம் கஞ்சன்றனைமடித்தோர்
வஞ்சமிலாத்தேவர்களை காயாம்புமேனி வாகாய்மிகக்காத்தோர்
தரணிமுழுதுங்காத்தோர் என்னய்யன் மறவர்மண்டபம்விட்டு
இராவணனைஜெயித்தோர் என்னய்யன் விரைவாயெழுந்திருந்தார்
இரணியனைச்சங்கரித்தோர் நரசிங்கமூர்த்தி தரணிதனையளந்தோர்
அதிரவருநடந்து நீலமேகம் மதுரைநகர்தேடியல்லோ
வள்ளிக்கொடிபடரும் சுந்தருஜமூர்த்தி வெள்ளியகுன்றம்விட்டு
அள்ளிவருகுதங்கே ஆதிமூலம் அப்பனுடையபல்லாக்கு

காரைக்கிணறுகடந்தார் நரசிங்கமூர்த்தி கள்ளர்பயமேதீர்ந்தார்

எங்களய்யனிச்சனோடைவிட்டு இலக்கும்வெள்ளைமண்டபத்தில்
சாரப்பொழுதினிலே காயாம்புமேனி வாராரெம்மாயவனோர்

வெள்ளைமண்டபத்திலே ஆதிமூலம் பள்ளிகொண்டாரப்போது
கள்ளர்பசியாற்ற கோவிந்தமூர்த்தி அள்ளியன்னந்தான்கொடுத்தார்

சம்பாவரிசியல்லோ என்னய்யனுக்கு தளிகைநைவேத்தியமாம்
அன்பானதேன்குழலும் பச்சைமாலச்சுதனுக்கு ஆமவடைதோசையும்

கொண்டுவந்து தான்படைத்து கும்பிட்டாரெல்லோரும்
கண்டுமகிழ்ந்து நரசிங்கமூர்த்தி உண்டுமிகப்புசித்து

பல்லாக்குவிட்டிறங்கி நரசிங்கமூர்த்தி உல்லாசமாகவேதான்
தல்லாகுளம் போகவேணுமென்று தண்டியலைக்கொண்டுவந்து

ஜோடித்தார்தண்டியலை நீலமேகத்துக்கு வேடிக்கையாகவேதான்
கோடாகோடிமுத்து தண்டியலுக்கு குலுங்கவே தொங்கவிட்டார்

கண்ணாடிதன்னையெல்லாம் எண்ணாமல்கட்டிவிட்டார்
பொன்னாலலங்கரித்தார் ஆதிமூலத்துக்குமுன்னாகப்பச்சைவைத்தார்

என்னாலுமங்காத நரசிங்கமூர்த்திக்கி இடைக்கங்கள் தொங்கவிட்டார்
சொன்னாலுந்தொலையாத தோரணங்கள் தொங்கவிட்டார்

சந்திரசூரியரை கோவிந்தமூர்த்தி தண்டியலுச்குள்ளேவைத்தார்
இந்திரலோகம்போல் என்னையனுக்கு அந்தரத்தோர் செய்தார்கள்

தங்கக்குடங்கள்வைத்தார் நீலமேகத்துக்கு வங்கக்கவரியிட்டார்
அங்கமெலாம் தங்கநிறம் அலங்கரித்தார் தண்டியலை

சித்திரப்பதுமைதனை நரசிங்கமூர்த்தி விஸ்தாரமாகவைத்தார்
பத்தரைமாற்றதினால் என்னையனுக்கு பதித்தார்கள்சிங்கமுகம்

எல்லோரும்பார்த்து தண்டியல் நன்றாயிருக்குதென்று

அனைவரும்கொண்டாடநரசிங்கமூர்த்தி அப்பனுக்குமுன்னேவைத்தார்

தண்டியலைக் கண்டவுடன் கோவிந்த மூர்த்தி தல்லாகுளம் யோவதற்கு

பெண்டுகள்தான்மயங்க காயாம்புமேனி பிரியமாய்வடிவெடுத்தார்

வெள்ளைமண்டபந்தனை சுந்தரராஜமூர்த்தி விட்டு வெளியேறி

கள்ளர்தொடர்ந்துவர ஆதிமூலம் வள்ளல் வருகிறாராம்

மூன்றுமாவடியில் காயாம்புமேனி முழங்குதுதண்டியல்தான்

பானுவுமேற்றிசைலன்பாயடையுதங்கே

புகழ்மஞ்சிகூடம் விட்டு என்னையன் பொற்பல்லாக்கேகுதுபார்

மாரியம்மன்கோவில் விட்டு நரசிங்கம்பட்டி நாட்டார்க்கிசையுடையான்

ஆரியலுமார்பன் இராமசாமிஅம்பலம் அலங்காரமண்டபத்தில்

காத்தனிலைப்பாரி ஐயன் நாலுகால் மண்டபத்தில்

நீதமுடன்கடந்து ஆதிமூலம் நேர்மையுடன்வரவே

கொந்துகொந்தாய்ஜனங்கள் நரசிங்கமூர்த்திபை சந்திப்புக்காணுதங்கே

அந்திநேரந்தனிலே என்னையன் சந்திப்புதான்கொடுத்தார்

அந்திநேரந்தனிலே சந்திரனும் வந்துதித்தானப்போது

அழகர் வர்ணிப்பு

பந்தத்தால்தீவெட்டி மானிடர் வந்துமேமிகப்பிடித்தார்
இந்திரலோகம்போலே இருந்ததே அப்போது
மந்திரநாமஞ்சொல்லி அந்தணத்தோர்வரவே

மூன்றுமாவடிகடந்தோர் தேன்மாரிநால்பொழிய
வானமுழங்கிவர மத்தாப்பு ஜோதிமின்ன

மந்திகுளத்தையடுத்து தண்டியல்வருகுதுதான்
சங்கீதம்பாட பச்சைமாலச்சுதனுக்கு தானவர்கள்கூத்தாட

மந்திகுளமண்டபத்தில் நரசிங்கமூர்த்தி வந்துமிகவேயிறங்கி
பொங்கலுடன்சம்பா என்னையனுக்கு புளியோதரைமுதலாய்

சக்கரைப்பொங்கலுடன் மிக்கவேதான்படைத்து
பொறுக்கத்தான்புசித்து ஆதிமூலம் பொக்கெனவேதானெழுந்து

மந்திகுளம்விட்டு கோவிந்தமூர்த்தி வருகிறார் தண்டியல்மேல்
சங்கத்தாரெல்லோரும் காயாம்புமேனியை ஆனந்தமாய்ப்பணிய

தல்லாகுளம்தேடியப்போ தண்டியலும்தான் வரவே
எல்லோரும்வந்து நரசிங்கமூர்த்தியை உல்லாசமாய்ப்பணிய

புல்லோரைத்தான்ஜெயித்தோர் ஆதிமூலம் தல்லாகுளத்தில்வந்தார்
கல்லால்மழைதடுத்தார் முன்னாள்வில்நாணைமுறித்தோர்

திருமாளிகைசுற்றி என்னய்யன் பெருமாள்பதிதனிலே
பாற்கடலிற்றுயின்றோன் அங்கே இன்பமாய்ப்பள்ளிகொண்டார்

இராத்திரியிலங்கிருந்தார் முன்னாள் பார்த்தனுக்குத்தேரூர்ந்தோர்

நாற்றிசையோர்கொண்டாட வீற்றிருந்தாரப்போது

ஆயர்பாடியில் என்னய்யன் போயிருந்தபாவனைபோல்
விதுரனார்மனையில் ஆதிமூலம் விருந்துண்டிருந்ததுபோல்

சம்பாநெற்சாதம் கோவிந்தமூர்த்திக்கு அன்பாய்ப்படைத்தார்கள்

கெம்பாற்றயிருடனே என்னய்யனுக்கு முன்பாகப்படைத்தார்கள்

சட்டுவர்க்கமுடன் சுந்தராஜமூர்த்திக்கு திட்டமாய்ப்படைத்தார்கள்

ஓட்டியஆடைதயிர் சட்டிசட்டியாய் வைத்தார்கள்

கூட்டியதேனுடனே நீலமேகத்துக்கு முட்டிமுட்டியாய்வைத்தார்கள்

பெட்டியில்பழங்களெல்லாம் கொட்டிப்பரப்பினார்கள்

கந்தபொடிகஸ்தூரி என்னய்யனுக்குமுன்னே விந்தையாய்வைத்தார்கள்

சந்தனகஸ்தூரி கோவிந்தமூர்த்திக்கு வந்துவந்துபூசினார்கள்

வானாட்டுக்கற்பகத்தில் ஆதிமூலத்துக்கு மலரையெடுத்துவந்து

பொன்னுலகத்தேவரெல்லாம் போட்டார்கள்மாலைதன்னை

சாற்றினார்கள்புட்பமலர் என்னய்யனை வாழ்த்தினாரெல்லோரும்

நாற்றிசையிலுள்ளவர்கள் சுந்தராஜமூர்த்தியை போற்றிப்பணிந்தார்கள்

சூரியனும்கீழ்த்திசையில் அப்போ தோணுகிறநேரமதில்

தேவர்களைத்தானினைந்து என்னய்யன் ஏவினார்குதிரைவர

வாசிதனிலேதுயிலும் நீலமேகம் மாயோனெழுந்திருக்க

தேவர்களுமப்போது குதிரையைத் தேடிப்பிடித்தார்கள்

குதிரைதனை முன்னேவிட்டு என்னையனை கும்பிவிட்டார்தேவரெல்லாம்
மதுரைவழிபோகவென்று அப்போகுதிரையலங்கரித்தார்
மகாமேருபோல என்னையன் குதிரை வெகுவானவுயரமது
முகமோபவளநிறம் என்னையன்குதிரை முழங்காலோ பச்சைநிறம்
அடிவயரோ வெள்ளை நீலமேகத்தின் குதிரை வடிவுள்ள உச்சுமட்டம்
பிடிக்கால்பவளநிறம் காயாம்புவின்குதிரை மடிக்காலோ நீலநிறம்
நாலுகால்வெள்ளை என்னையன்குதிரை நடுவெல்லாந்தங்கநிறம்
வாலாபவளநிறம் கார்மேகத்தின்புரவியெல்லாம் புள்ளிநிறம்
கழுத்தோ பவளநிறம் நீலமேகன்குதிரைக்கு காதிரண்டுந்தங்கநிறம்
போகுமரைக்குதிரை நீலமேகத்துக்கு புள்ளிபோற்றேசிமட்டம்
யாருமறியாதபடி என்னையன் குதிரைமேருவெல்லாம் சுற்றிவரும்
வேகமாய்பொன்புரவி ஆதிமூலத்துக்கு மின்னலாம் பொன்சவுக்கு
வாகானநற்பதக்கம் சுந்தராஜமூர்த்திக்கு வரிந்தார்கள்ரூபமெல்லாம்
தங்கத்தால்கடிவாளம் ஆதிமூலத்தின்குதிரைக்குஇங்கிதமாய்த்தான்சேர்த்து
அங்கவடிசேணம்வைத்தார் நீலமேகத்துக்கு தங்கமயமாகவேதான்
வன்கழுத்தில் சுந்தராஜமூர்த்திக்குதிரைக்குத் தங்கமணிதான்போட்டார்(டு
காலுகாலிற்றண்டையிட்டுநீலமேகத்தின்குதிரைக்குமேலெல்லாம் சுங்குவிட்
வாலுக்குமுத்து என்னையன்குதிரைக்கு வரிந்தார்கள்ரூபமெல்லாம் (கள்
நெற்றியிலேசக்கரத்தை ஆதிமூலத்தின்குதிரைக்குவைத்து மிகப்பதித்தார்க
வெற்றிசெய்யவில்லும் காயாம்புமேனிக்கு அஸ்திரமுங்கூடவைத்து
இந்தப்படியாக்குதிரை நீலமேகத்துக்கு தேவரமைத்து வந்து
சந்தோஷமாய்க்கொண்டு வந்துதேவர்சாமி முன்னேவிட்டார்கள்
பைரந்நாகத்தில் பள்ளிகொண்டார் அப்போபார்த்து மிகக்களித்து
வைகைநதிபோகவென்று சுந்தராஜமூர்த்தி வாகாகக்கச்சைகட்டி
முத்துநல்லகுல்லாவை ஆதிமூலம் வைத்தார்முடிமீதில்
பத்தரைமாற்றினுல் நீலமேகம் வெற்றிச்சிலம் பணிந்தார்
பாரெல்லாம்கொண்டாட நரசிங்கமூர்த்தி பச்சைப்பதக்கமிட்டார்
மார்பிலேபச்சைதனை காயாம்புமேனி கோர்வையாய்த்தொங்கவிட்டார்
தங்கச்சரப்பளியை நரசிங்கமூர்த்தி இங்கிதமாய்த்தானணிந்தார்
சங்கத்தார்கொண்டாட ஆதிமூலம் சன்னமஜைதக்காதிலிட்டார்
முன்கையில்முதாரியிட்டார் கோவிந்தமூர்த்தி முருகுமேற்காதிலிட்டார்
பத்துவிரலுக்கு சுந்தருஜமூர்த்தி பசும்பொன்மோதிரமிட்டார்
துத்திப்பூச்சல்லடத்தை என்னய்யன் சிற்றிடையிற்றுன்றறித்தார்
பத்தரைமாற்றக்குஞ்சம் நீலமேகம் சுற்றிவரதொங்கவிட்டார்
இப்படியாகவே கோவிந்தமூர்த்தி வந்துநின்றுர் காயாம்பூவண்ணன்
அந்தமுடனிமையோர் ஆதிமூலத்துக்கு கொண்டுவந்தார்குதிரைதனை
கடிவாளமேபிடித்து சுந்தராஜமூர்த்தி கையில்சவுக்கெடுத்து
அடித்துப்போயேறயிலே நரசிங்கமூர்த்தி அப்பன் குதிரையப்போ
ஏற்றங்கொடுக்குதில்லை என்னய்யன் குதிரை இடசாரிபோடுதங்கே

ஆற்றுக்குப்போகவென்று அய்யன்குதிரைஅருள்பாரிகொள்ளுதங்கே
பார்த்துமிகவே கோவிந்தமூர்த்தி பண்பாயனவரித்து
சாற்றினார்மந்திரத்தை ஆதிமூலம்குதிரை நேர்த்தியாய்நிற்குமடி
குதிரைமேலேறினார் நீலமேகம் குவலயமெல்லாம் நடுங்க
மதுரைவழிபோகவென்று சுந்தராஜமூர்த்தி குதிரைமேல்தானேறி
பெருமாள்கோவிலுக்குள்ளே என்னய்யன்குதிரை ஓடுதுசவாரி
திருமாளிகையைவிட்டு சாமிகுதிரை திரும்புது தெற்குமுகம்
வானமுழங்குதங்கே கோவிந்தன்முன்னே மத்தாப்புஜோதிதன்ன
தேனும்பொலியுதங்கே என்னய்யன்மேல் சிந்தினதுபுட்பமலர்
குடைசுருட்டியெல்லாம் கோவிந்தன்முன்னே கோடானகோடிவர
படைகள்திரண்டுவர என்னய்யன்முன்னேபந்தயம்பிடித்துவர
தீவெட்டிமத்தாப்பு சுந்தரராஜன்முன்னே ஜெகஜோதிபோல் விளங்க
கோவிந்தாவென்றுசொல்லி என்னய்யனை கூப்பிடுதுபேய்களெல்லாம்
பையரவில்பள்ளிகொண்டார் அப்போபையவே வழிபோகிறார்
கையினிற்கொண்டுவந்து நாச்சியார்மாலைதனை மெய்யாகத்தான்கொடுத்தார்
நாச்சியார்மாலைதனை என்னய்யன் தாழ்ச்சியறவேவாங்கி
காட்சிகொடுத்து நாச்சியார்மாலையை கழுத்தில்மிகப்போட்டு
வந்தார்வெளியேறி ஆதிமூலங்குதிரை வானில்பறக்குதங்கே
அந்தமுடனிமையோர் என்னையன்குதிரையை தந்திரமாய்த்தான்பிடித்து
தல்லாகுளத்தின்வெளியில்நரசிங்கமூர்த்திகுதிரையைதனியேபோகவிட்டார்
எல்லாரும்பார்க்க என்னையன்குதிரை வையாளிபோடுதங்கே
பூக்குடையைக் கொண்டுவந்து அப்போபிடித்தார்கள் மானிடர்கள்
பூக்குடைக்குள்ளே என்னையன்குதிரைபோடுபோடெனப்போகுதுபார்
வெட்டிவேர்சப்பரத்தில் ஆதிமூலம் திட்டமுடன்போய்புகுந்து
வண்டியில்லாச்சப்பரத்தை நீலமேகம் அண்டியருகாகவிட்டு
குதிரைதனைபின்னேவிட்டார் நீலமேகம்குடைகளெல்லாம்முன்னேவிட்டார்
மதுரைவழிதேடி ஆதிமூலம் வருகிறாரப்போது
திருக்கண்ணைத்திறந்து கோவிந்தமூர்த்தி திரும்பிமுகம்பார்த்து
வருக்கமுடனெல்லோர்க்கும் காயாம்புமேனிவரங்கொடுத்துத்தானெழுந்து
சப்பாத்தடிமுன்னே நீலமேகம் சம்பிரமாய் வந்துநின்று
சப்பரத்தைப்பார்த்து கோவிந்தமூர்த்தி சந்தோஷங்கொண்டுநின்று
நாசித்தலையரம் என்னையன்சப்பரம்நடுவே எட்டுகோணலுமாம்
வாசிக்குதிரைதனை சப்பரத்தில் நீலமேகம் வைத்திருந்தார் முன்னேதான்
வச்சிரத்தால் கால்நிறுத்தி சப்பரத்தில் வைரவனைத்தான்போட்டு
காய்ச்சியபால்குடித்தோர் ஆதிமூலம் ஆச்சரியமாய்ப்பார்க்க
பொன்னாலலங்கரித்து சப்பரத்தில் கண்ணாடிமுன்னேவைத்தார்
எந்நாளுமங்காத என்னையனுக்கு இந்திரவர்ணப்பட்டுவைத்தார்
சந்திரசூரியரை சப்பரத்தில் தானுமிருபக்கம்வைத்தார்
மந்திரியுடன்வானரத்தை யநேக பந்திபந்தியாகவைத்தார்

172836

வட்டக்கொடுங்கைதனை சப்பரத்தில் திட்டமுடன் தான்சேர்த்து
பட்டாலலங்கரித்தார் ஆதிமூலத்துக்கு பட்டுமேற்கட்டிவைத்தார்
பச்சைக்குதிரைவைத்தார் நீலமேகத்துக்கு வச்சிரக்கவரியிட்டார்
அச்சில்லாச்சப்பரத்தை அலங்கரித்தார் தேவரெல்லாம்
வெள்ளிக்குதிரைவைத்தார் சப்பரத்தில் துள்ளித்திரியும்படி
பள்ளிக்கூடத்துப்பிள்ளையைப்போல் அங்கே பாவைகளைச்சூழவைத்தார்
ஆயர்மனமகிழ்ந்து சுந்தரராஜமூர்த்தி காயாம்புமேனியப்போ
தாயா ரசோதையும் கோவிந்தமூர்த்தி தந்தையு முன்னடத்தி
கருடனையுமுன்னேவிட்டு ஆதிமூலம் வருணனையுங்கூடேவிட்டார்
ஆண்டாரையமுன்னேவிட்டார் பச்சைமாலச்சுதன்மாரையுங்கூடவிட்டார்
வேண்டும்வரங்கேட்பவரை என்னையன் வண்டியூரேகுமென்றார்
சப்பரத்தின் முன்னே நரசிங்கமூர்த்தி கொப்பரையைத்தூக்குமென்றார்
அப்பனுடையகொப்பரையை மானிடர்கள்செப்பமுடன் தூக்கிவிட்டார்
கொப்பரைக்குக்காவலாய் ஆதிமூலம் கூடக்கறுப்பணனை
செப்பமுடன்காத்துவர காயாம்பூமேனி ஒப்பமுடனேவினாம்
யானைமேல்பேரிகையாம் என்னையனுக்கு அதிரமுழங்குதங்கே
வாணமுழங்குதங்கே என்னையனுக்கு மத்தாப்புமின்னுதங்கே
எருதுமேல்நகரா நரசிங்கமூர்த்திக்கு எங்குமுழங்குதங்கே
திருத்திபொழியுதங்கே கோவிந்தன்முன்னே தாசியெல்லாம்தான்குழுமி
தப்புமுழக்கிவர கோவிந்தமூர்த்திக்கு தாதர்கூத்தாடிவர
கற்பூரம்ஏந்திவர அய்யனுக்குமுன்னே கவிவாணர்பாடிவர
மூலபலசசண்டையிலே முன்னாள் முழங்கினபாவனைபோல்
ஆலமுண்டகண்டனங்கே அரனுமையும் பார்த்திருக்க
பால்குடித்துதான்வளர்ந்தோர் ஆதிமூலம் ஆலிலைமேல் பள்ளிகொண்டார்
கோலமனேகஞ்செய்தார் என்னையன பாலப்பிராயத்திலே
சூத்திரப்பாவைதனை ஆதிமூலம் ஆற்றுக்கேகுமென்றார்
வாழ்த்தினபேரையெல்லாம் சுந்தரராஜமூர்த்திவைகைக்கு போங்களென்றார்
திரியாட்டுக்காரரையும் கோவிந்தமூர்த்தி திரண்டுவிளையாடுமென்றார்
குறிசொல்வோரையெல்லாம் என்னையன் கூடவாவென்றுசொன்னார்
மாமன்றனைமடித்தோர் ஆதிமூலம் வையகத்தைத்தானளந்தோர்
கோமாரிதன்னையெல்லாம் சுந்தரராஜமூர்த்தி கான்மாறியாடுமென்றார்
வெடிகள்முழங்குதிங்கே என்னையனுக்கு முன்னேஇடிகளிடித்ததுபோல்
கொடிகள்பிடித்துவர கோவிந்தமூர்த்திமுன்னே கூத்தாடிப்பேர்கள்வர
பதினாலுலகமெல்லாஞ் சப்பரத்தைப்பார்த்துமிகக்கொண்டாட
பதினெட்டாநாட்போரில் முன்னேபார்த்தன்றேர் போனதுபோல்
சப்பரத்தைத்தூக்குமென்று ஆதிமூலம் அப்பனுரைத்திடவே
சப்பரந்தூக்குமென்று சாணார்மறவரெல்லாம் எப்போவென்றுதானிருந்தார்
ஒப்பமுடன்சப்பரத்தை மானிடர்கள் அப்போதுதூக்கிவிட்டார்
அப்பனுடசப்பரமும் ஆகாயம்போகுதங்கே

இந்திவிமானம்போல சப்பரம் அந்தரத்திற்ருன் பறக்க
சந்திரான் சூரியரும் அப்போ வந்துமிகப்பார்த்திருக்க
வைகைக்குவரவில்லையென்றுமானிடர்கள் வாடியிருக்கையிலே
மைகொண்டமேனியனுர் அப்போ வைகைக்கு வாகினைத்தார்
அப்போதுசப்பரந்தான் மானிடர்கள் செப்பவேதோளில்வைத்தார்
சப்பரத்தைத்தானெடுத்து மானிடர்கள் செப்பமுடன் சாலைவழி
கொண்டுதான்போகையிலே என்னையன்மனமகிழ்ந்து
வண்டியூர்போகவென்று நீலமேகம் கனடிதமாய்த்தானெழுந்தார்
பட்டாவல்லூபக்கம் சுந்தராராஜமூர்த்தியை கட்டிப்பிடித்துவர
இஷ்டமாய்ப்பூக்குடைகள் ஆதிமூலஞ்சிரசில் முட்டப்பிடித்துவர
சப்பரமுமுன்னடக்க கோவிந்தமூர்த்தி சுவாமியும்பின்னடக்க
அப்போபிசாசெல்லாம் காயாம்புமேனி அய்யன்முன்னே கூத்தாட
முந்தன்பூசாரிசடையன்புசாரியிவர்முன்னூரில் கட்டிவைத்த
சுத்தமுகத்தெய்வகன்னி காமாக்ஷியம்மைவளர் சோலைகுட்டிகோயில்வந்து
முத்லநயாககோனுரும் சடையன்பூசாரியிவர் மோர்தயிர்பானகமுடன்
உத்தமருக்கேகொடுக்க திருக்கண்தனிலிருந்து உள்ளமகிழவேநடந்து
மெத்துக்கருப்பனென்னும் சேனைசயமாணியிவர் முன்னூடியைநடக்க
துய்யபரியேறி மாயழகமூர்த்தி துடியாகத்தானேகி
வெய்யோனுதிக்குமுன்னே என்னய்யன் வைகைக்குத்தான்வாரார்
கோரிப்பாளயங்கடந்து நீலமேகஸ்வாமி குதிக்கின்றபோது
வாரிதனிலேதுயிலும் என்னய்யன்குதிரை சாரிதானேடுதங்கே
பானுவுந்தானுதிக்க நரசிங்கமூர்த்தி யானைவிழுந்தான்கிடங்கில்
வானுலகோர்கொண்டாட ஆதிமூலம் வந்துமிகவேகுதித்தார்
கொட்டகைகளெல்லாம் அங்கே சட்டமுடன்போட்டிருக்க
கொட்டகைக்குள்ளே சுந்தரராஜமூர்த்திதிட்டமுடன்போயிருந்து
சட்டவர்க்கமுடனே நீலமேகத்துக்கு திட்டமுடனேபடைத்தார்
பட்டாரதீபங்கொடுக்க ஆதிமூலம் சட்டமுடன்புசித்தார்
உண்டுபுசித்தவுடன் நரசிங்கமூர்த்தி வண்டக்குதிரைமேல்
கொண்டுவருகுதங்கே குதிரை கோவிந்தமூர்த்தியைச்சுமந்துகொண்டு
ஆற்றிலேதான்குதித்தார் நீலமேகம் அலைவோருந்தான்நடுங்க
சாற்றினுர்மாலைதனை மானிடர்கள் போற்றினுர்மாயவனை
போற்றினமானிடர்க்கு பச்சைமாலச்சுதன் பார்த்துப்படியளந்தார்
ஆற்றில்நடுவாக நரசிங்கமூர்த்தி அப்பன்வருகிறாரும்
கூடலழகியபெருமாள் காயாம்பூமேனி ஆவலுடன் வந்துகண்டார்
கூடற்பெருமாளுக்கு நீலமேகம் கொடுத்தாரேமாலைதனை
சந்தனமாலைதான்கொடுத்தார் ஆதிமூலம் வந்தபெருமாள்தனக்கு
விந்தையாய்போகவிட்டு சுந்தரராஜமூர்த்தி வந்தார்கிழக்குமுகம்
எதிர்த்துத்தான்பார்த்து என்னய்யன் எடுக்கச்சொன்னுர் தலைமுடியை
பேரிட்டுத்தான்கொடுத்து மானிடர்கள் எடுத்தார்தலைமுடியை

ஊற்றுதான்றோண்டியங்கே ஆதிமூலத்தாருக்கு ஆற்றில்தலைமுழுகி
வாழ்த்தியனைவோரும் சுந்தரராஜமூர்த்தியை போற்றித்துதித்தார்கள்
கொப்பறையில்காணிக்கை மானிடர்கள்கொண்டுவந்துதான்போட்டு
அப்பன்முன்னேவந்துநின்று செப்பமுடனேதுசொல்வார்
பார்த்துமிகக்கையெடுத்து என்னையனுக்கு நேர்த்திகளைச்சொல்லுகிறார்
வாழைக்குக்கீழ்க்கன்னு ஐயா வந்துமுளைத்ததுபோல்
மலடிக்கொருகுழந்தை காயாம்புமேனி மாயவரேநீர்கொடுத்தாக்கால்
மேலைக்கிந்தபடி நரசிங்கமூர்த்திக்கு இதுபோல்கொடுப்பமென்று
சூரியனைத்தான்பார்த்து மானிடர்கள் கோரியேதான்போனார்
வாரிதனிலேதுயிலும் பச்சைமாலச்சுதன் மாயோனதிசயித்தார்
திரியாட்டுக்காரரிடமப்போ குறிகேட்போர் வந்துநின்று
குறிசொல்லவேண்டுமென்று மானிடர்கள்கும்பிட்டுத்தான்விழுந்தார்
விழுந்ததொருமானிடரையப்போ எழுந்திரிக்கத்தானுரைத்து
அழுத்தமுடன்சாமிதன்னை திரியாட்டுக்காரரைப்போய்வரவழைத்தார்
விழித்துமேதான்பார்த்து அப்போ எறித்துவிடுவதுபோல்
அழுத்தமுடன்சொல்லுகிறார் முன்னேஅவர்செய்த குற்றமெல்லாம்
முன்னோர்கள்தானடந்த முறைதவறி நீநடந்தாய்
பெண்ணுளுமென்னை பெரிதாய் நினைக்கவில்லை
மாகென்றுபோட்டால் பால்வைத்துமிகக்கும்பிடுவார்
வீடுதனில்பொங்கலது வீரியமாய்ப்போடுவார்கள்
காடேயெடுத்ததினம் முன்னோர்கள் கும்பிட்டாக்கிவைப்பார்
ஆடிக்கொருகிழமைஎனக்கு ஆக்கிப்படைத்துவைப்பார்
இத்தனையும்தான்செய்ய பயலே என்னைமிகமறந்தாய்
பத்தினிபசுப்போலே பயலேவைத்தவனுநானேதான்
இந்தக்குற்றமேதீர்ந்தால் அடே அந்தப்பெண்ணுக்கு யான்குழந்தை
சுந்தரமுடன்தாரேனென்று அப்போ சாமிமிகவுரைத்தார்
இப்போதுசொன்னதெல்லாம் சாமி அப்பனேமெய்தானென்றார்
இப்போதுசொன்னபடி நீலமேகம் அப்பனேகேட்போமென்றார்
உன்குலதெய்வத்துக்கு பயலே ஒருபணமுமேமுடித்தால்
பெற்றபிள்ளைசெய்ததொரு அடேகுற்றசெல்லாம்நான்பெறுப்பேன்
அச்சப்படாமலொரு உனக்குஆண் குழந்தைநான்தாரேன்
இச்சையுடன்காணிக்கையுப் நீ எனக்குமிகவேதான்போடு
என்றுகுறிசொன்னார்கள் அந்தவண்டியூர்போமளவும்
பண்டுலகையுண்டருள்வோன் காயாம்புமேனி பார்த்துமிகச்சிரித்து
வடகரையிற்றனிருக்கு வளமையுள்ள மண்டபத்திற்போயிருந்து
திடமுடனேபாயாசமெல்லாம் நரசிங்கமூர்த்தி திகட்டவேதான்பருகி
வண்டியூர்போவதற்கு ஆதிமூல மாயவனாரப்போது
கண்டிக்குதிரைகளை கோவிந்தமூர்த்தி கண்டிதமாயேயாடவிட்டு
குதிரைவருகையிலே அங்கே அதருதுலோகமெல்லாம்

வாராரேவைகைநதி நரசிங்கமூர்த்தி மானிடர்கள் தான்பார்க்க
பாரெல்லாங்கொண்டாட ஆதிமூலம் பையரவின்மேல்வாரார்
தேவர்கள்புட்பமலர் காயாம்புமேனிக்கு தாவிப்பொழிந்துவர
மாவேந்தரெல்லாம் என்னய்யனை வந்துபணிந்துநின்றார்
மகரவேர்முன்னாள் மார்க்கண்டனுக்காக எமனையுதைத்து
மாய்கையாய்வந்துசிவன் மார்க்கண்டனைக்காத்ததுபோல்
பச்சைமாலப்போது மானிடர்கள்பேரில் இச்சையுடன் தான்மகிழ்ந்து
கச்சைமுலையாட்கு ஆதிமூலம்நீலமேகம் காட்சிமிகக்கொடுத்து
காட்சிகொடுத்து நரசிங்கமூர்த்தி காயாம்புமேனியப்போ
தாட்சியில்லாமல் சுந்தரராஜமூர்த்தி தானிருந்தார்மண்டபத்தில்
அபிஷேகமேகொடுத்தார் மானிடர்கள் புவியேழுங்கொண்டாட
அபிஷேகங்வாங்கி கோவிந்தமூர்த்தி அப்பனெழுந்திருந்தார்
கருதுகால்மண்டபமும் ஆதிமூலம் கார்க்கோடகன்மேலேதான்
மதுரைதனைவிட்டு இராமராயர் மண்டபத்தில்வந்திறங்கி
சதுருடனேயெல்லோரும் நீலமேகம் தானேபசியாற்றி
அதிரும்படியாக குதிரையை அதட்டியேதானடத்தி
கருதுகால்மண்டபமும் சுந்தரராஜமூர்த்தி கடந்தாராமப்போது
ஜருகைபளபளென ஆதிமூலம் ஜடுதியாய்வாராராம்
அனுமந்தபுரத்தில் நரசிங்கமூர்த்தி அங்கிருந்தமண்டபத்தில்
மனுவரெல்லாம்பார்த்திருக்க சுந்தரராஜமூர்த்தி வந்துமிகவேயிறங்கி
ஆலாத்திகற்பூரமுடன் மானிடர்கள் அப்போதுதான்கொடுத்தார்
சீலமுடன் அன்னம் புசித்து ஆதிமூலம் சென்றார்வண்டியூர்தனிலே
சப்ரபத்தடியில் கோவிந்தமூர்த்தி ஒப்பமுடன்வந்திருந்தார்
சப்பரம்விட்டிறங்கி என்னய்யன் சாமிக்கவுண்டர் கொட்டகையில்
பாயாசத்தன்னுடனே நீலமேகசுவாமிக்கி பால்பழமுந்தான்கொடுத்தார்
ஆயாசந்தீரசுந்தரராஜமூர்த்திஅப்போமிகப்புசித்து
விருந்துண்டுசாப்பிட என்னய்யன் இருந்திளைப்பாறி
அந்தயிடம்விட்டு நரசிங்கமூர்த்தி இடையருடமண்டபத்தில்
ஆயர்பாடியில் ஆதிமூலம் அந்நாள்வந்ததுபோல்
பால் தயிர்நெய்யுடனே சுந்தரராஜமூர்த்தி பாங்காய்மிகப்புசித்து
மற்றயேர்மண்டபத்தில் காயாம்புமேனி வந்துமிகவேயிறங்கி
சுத்தமுடன்தந்ததெல்லாம் கோவிந்தமூர்த்தி மத்தியானமேபுசித்து
பெருயாள்கோவில்தனிலே நீலமேகம் அருமையுடன்போயிருந்தார்
அருமையுடன்மானிடர்கள் அப்போதுதான்கொடுத்தார்
வருந்தவேகண்துயில அப்போ லதிஷடர்மனையாளுதித்தார்
அந்தநேரந்தனிலே அங்கே சந்திரனும் வந்துதித்தான்
அந்நேரந்தனிலே காயாம்புமேனி அய்யனெழுந்திருந்தார்
பந்திபந்திபாய்த்திவட்டி என்னய்யனுக்கு பகலதுபோல்தான்பிடிக்க
ஐந்துதலைநாகத்தில் கோவிந்தமூர்த்தி அய்யன்வெளியேறுகிறார்

திருமாலுமப்போது அங்கே திருமுடியுடன் பள்ளிகொண்டார்
பள்ளிகொண்டோனிருக்க அங்கேபார்த்திருந்தார்மானிடர்கள்
அள்ளியெரிந்தார்கள் என்னய்யன்முன்னே அப்போதுவாணமதை
வெள்ளியுதிர்ந்ததுபோல் மானிடர்கள் அள்ளியிட்டார்வாணமதை
பள்ளிகொண்டாரப்போது ஆதிமூலம் பார்த்ததிசயித்தார்
இந்தப்படியாக சுந்தரராஜமூர்த்தி இருந்தாரப்போது
வந்துவெய்யோன்தானுதித்தான் அப்போ சந்திரனும்போய்மறைந்தான்
கெருடன்மேலேதானேறி நீலமேகம் அருணனுதயத்தில்
வருகிறார் தென்முகமாய் காயாம்புமேனி மதுரைநகர்தான்தேடி
இராமாராயர்மண்டபத்தில் நரசிங்கமூர்த்தி நாட்டியங்கள் தான்பார்த்து
ஓராமாவென்று ஆதிமூலம் உன்னிதமாய்த்தானிருந்தார்
அதிகமோகம்பெருகி முன்னால் ஆச்சியரைச்சேர்ந்ததுபோல்
பதினெட்டவதாரம் நீலமேகம் பாங்காய்மிகவெடுத்தார்
இராத்திரியிலிருந்து கோவிந்தமூர்த்தி நடனமெல்லாந்தான்பார்த்து
போற்றினமானிடர்க்கு ஆதிமூலம் பார்த்து வரங்கொடுத்து
தங்கப்பல்லக்குமேலே சுந்தராராஜமூர்த்தி இங்கிதமாய்த்தானேறி
வங்கக்கடலேழும் அப்போ வளர்மதுரையருகாக
வாராரெம்மாயவனூர் அப்போ வளர்மதுரையருகாக
தாராளமாகவேதான் காயாம்புமேனி தல்லாகுளம்போவதற்கு
திருக்கண்ணால்யாவரையும் நீலமேகம் திரும்பிமுகம்பார்த்து
பெருக்கமுடனெல்லோரும் ஆதிமூலம் வரமுமிகக்கொடுத்து
மைசூரார்மண்டபத்தில் என்னய்யன் வந்துமிகவீற்றிருந்தார்
பசியாற்றிக்கொண்டிருக்க பரிதியும்போய்த்தான் மறைந்தார்
மல்லிகைப்பூப்பல்லாக்கை அப்போ மானிடர்கள்கொணடுவந்தார்
கொண்டுவந்துதானிருத்த நீலமேகம் குதூகலமாய்வீற்றிருந்து
வள்ளலாரப்போது நீலமேகசுவாமி மலைபோகவேணுமென்று
கள்ளர்வேஷந்தானெடுத்து கையில் வளைதடியுந்தான்பிடித்து
சரக்கோட்டையிட்டதுபோல் அங்கேஜனங்கள்மிகச்சூழ்ந்துவர
புரப்பட்டாரப்போது கோவிந்தமூாத்தி பேரண்டந்தானநடுங்க
பொல்லாதராவணனை முன்னாள் நீலமேகம் வில்லாலறுத்திட்டார்
தல்லாகுளம்தான்கடந்தார் முன்நாள் சமுத்திரமுந்தான்கடந்தார்
வடக்குமுகமாக நீலமேகம் வாரார்மலைதேடி
அடக்கமுடனப்போது மானிடர்கள் அனைவோருந்தான்சேர்ந்து
தாம்படியுண்டோனே கோவிந்தமூர்த்தியை சரணஞ்சரணமென்று
சோம்பிமுகம்வாடி மானிடர்கள் சேர்ந்துமுன்புகுந்தார்கள்
கொஞ்சஜனத்துடனே கொப்பரையை முன்னேவிட்டார்
தஞ்சமென்றேனைக் காத்தோர் பஞ்சவர்க்குத்தூதுசென்றோன்
மறவர்மண்டபத்தில் காயாம்புமேனி வந்துமிகத்தானிறங்கி
அரக்கர்குலமடித்தோன் ஆதிமூலம் உறக்கந்தானில்லாமல்

கூத்துத்தான்பார்த்திருந்தார் நீலமேகம் கோழிகூவுமுன் தானெழுந்து
ஆற்றுக்குப்போன நரசிங்கமூர்த்தி அலுப்பெல்லாந்தானகற்றி
ஆதிமூலந்தானிருக்க அப்போ அருணனும்வந்துதித்தான்
வேதியர்களெல்லோரும் என்னய்யனுக்கு வேதமந்திரமோதிவர
கோவிந்தனைத்தேடியப்போ கோவிந்தன்மலைவருக
ஆவலாய்ச்சித்தர்களும் அப்போ தாவியேமுன்வந்து
கண்டுவந்து நான்தொழுது காயாம்புமேனிக்கு கையால்மலர்தூவி
பண்டுமுன்னயோத்தியில் என்னய்யனுக்கு பட்டங்கட்டியபாவனைபோல்
திட்டமுடன்கொண்டுபோய் நீலமேகத்தை சிம்மாசனத்தானேற்றி
வட்டமுடனுலாத்தி ஆதிமூலத்துக்கு வந்தெடுத்தார்கன்னியர்கள்
அயோத்திதன்னிலே என்னய்யன் முன்னரசாண்டிருந்ததுபோல்
சையோகமாகப்பேசி ஆதிமூலம் தானிருக்கும்வேளையிலே (த்தார்கள்
அப்போதுமானிடர்கள் என்னய்யன்முன் கொப்பரையேகொண்டுவந்துவை
கொப்பரையைத்தான்திறந்துகொட்டியெண்ணித்தான்பார்த்து
கருவலத்திற்சேருமென்று ஆதிமூலம் காயாம்புமேனிதானுரைக்க
கருவலத்திற்கொண்டுபோய் பணகதைக்கணக்குமிகப்பார்த்துவைத்தார்
திருவிழாவந்த நீலமேகம் நீட்டுகள்போவதற்கு
திருமாலுமப்போ ஆதிமூலம் மலையிற்போய் தீர்த்தமாடிவந்து
வைகைக்கிப்போய் நீலமேகம் வந்தலுப்புதீருதற்கு
தைலங்கள்தேய்த்து சுந்தரராஜமூர்த்தி ஸ்நானமிகவேசெய்து
ஆலிலைமேல்பள்ளிகொள்ளும்காயாம்பு மேனிஅப்போதிருநாமந்தானுமிட்டு
பால்தயிர்நெய்யுடனே நீலமேகம்பாங்காய்மிகப்புசித்து
அடைக்காயும்வெற்றிலையும் ஆதிமூலம் அப்போமிகவருந்தி
ஆதிசேஷன்மேலேதான் அங்கே விஷ்ணுவும்பள்ளிகொண்டார்
ஆயன்மிகப்பள்ளிகொள்ள அப்போது அங்குள்ளமானிடர்கள்
மாயவனைத்தான்தொழுது மானிடர்கள் தான்போனார்
அழகர்தன்வர்ணிப்பை ஆவலுடன்படிப்போரும்
அன்பாய்க்கேட்போரும் அனைவருந்தான்வாழி
செகத்துளோர்தான்வாழி செங்கோலர்தான்வாழி
சிறுவனுந்தான்வாழி சிநேகிதரும் தான்வாழியதே.

அழகர்வர்ணிப்பு

முற்றிற்று.

இஃது
மதுரை
திண்டுக்கல் ரஸ்தா
மகமதியன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
1917

172836